பாங்கி ஊழியர்களின் பிரச்சினை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஓரணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆவணி 17உ வியாழன் (2—9—54) வெளியூர்: ஆவணி 18உ வெள்ளி (3—9—54)	மலர்: 2 இதழ்: 69

மீண்டும் பரிசீலனை?

இந்திய சர்க்கார் ஆலோசனை

நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு

மூன்று தரப்பினரையும் சிபார்சுகள் கட்டுப்படுத்தும்

கிரியை பதவியில் நீடிக்க முயற்சி!

தொழில் அமைச்சரின் கருத்துக்கு அதிக மதிப்பு தரப்படுமா?

பாங்கித் தீர்ப்பை மாற்றியமைத்ததால் நேர்ந்துள்ள நிலைமைகளைப் போக்க இந்திய சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறார்கள் என்று தெரிகிறது.

தொழிலாளர் நலனுக்காகத் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தமைக்காக தோழர் கிரி அவர்களைப் பாராட்டி பல செய்திகள் வருகின்றனவாம்!

அதே நேரத்தில், இந்திய சர்க்கார் அதிபர்கள், கிரி அவர்களின் இராஜினாமாவை வாபஸ் பெறுமாறு செய்ய 'பகீரதப் பிரயத்தனம்' செய்கிறார்கள் என்று தெரிகிறது.

இதற்காக இந்திய சர்க்கார் இரு பிரச்சினைகளை தங்களுக்குள் ஆலோசிக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

பாங்கி ஊழியர்களுக்கான அப்பீல் மன்றத்தின் தீர்ப்பை மீண்டும் புனராலோசனை செய்து, பாங்கிகள், இந்திய சர்க்கார், பாங்கி ஊழியர்கள் இவர்கள் மூவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சிபார்சுகளைச் செய்யத் தகுந்த அதிகாரங்களுடன் கூடிய கமிஷன் ஒன்றை நியமிக்க இந்திய சர்க்கார் ஆலோசனை செய்கிறார்களாம்! இக்கமிஷனுக்கு நீதிபதி ராஜாதியக்ஷாவின் சேவைகளைப் பயன்படுத்த இந்திய சர்க்கார் எண்ணுகிறது என்று தெரிகிறது.

அடுத்த இந்திய மந்திரி சபையில் இறுதியான அதிகாரம் பிரதம மந்திரிக்குத்தான் என்றாலும் தொழில் அமைச்சரின் கருத்துக்கு முக்கியமான பிரச்சினைகளில் அதிக முக்கியத்துவம் கொடுக்க இயலுமா என்பதையும் ஆலோசிக்கிறார்களாம்!

வி வி கிரி தனது இராஜினாமாவை வாபஸ் பெறுவார்—வாபஸ் பெறும் நிலை ஏற்படாது என்ற இருவித எண்ணங்கள் பாராளுமன்ற வட்டாரங்களில் நிலவுகிறது!

அடிமைகளாக வாழ்கிறார்கள்!

சட்டம் இயற்றினால் மட்டும் போதாது!

நாட்டில் நிலவும் வெறுப்பு — மனப்பான்மை அகல வேண்டும்

தீண்டாமை ஒழிப்பு மசோதா தனிக் குழு பரிசீலனைக்குச் செல்கிறது

இந்திய மக்கள் சபை தீண்டாமை ஒழிப்பு மசோதாவை இரு சபைகளின் கூட்டு செலக்ட் கமிட்டி பரிசீலனைக்கு அனுப்பியது.

இதற்காக நடைபெற்ற விவாதத்தில், பல உறுப்பினர்கள், இந்திய சர்க்கார் தீண்டாமை ஒழிப்பிற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைத் தீவிரமாக்குமாறு வற்புறுத்தினார்கள். சட்டமியற்றிவிட்டால் மட்டும் போதாது என்றும், அதை அமுல் செய்வதில் தீவிரமாக இருந்தால்தான் தீண்டாமை ஒழியுமென்றும் பல உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினர்.

இந்த மசோதா, தீண்டாமை நோயின் கொடுமையை மட்டும் எடுத்துக் காட்டுகிறது என்றும், நோயின் உள் அம்சங்களைப் போக்க வகை செய்வதாக இல்லையென்றும், நாட்டிலே காணப்படும் ஜாதி முறைக்கான அமைப்புகள் ஒழிக்கப்பட்டால் ஒழிய தீண்டாமையின் கொடுமைகள் நாட்டிலிருந்து மறையாது என்றும் பண்டித தாக்கூர்தாஸ் பார்கவா எடுத்துக் காட்டினார்.

அசாமைச் சேர்ந்த என். சி. லாஸ்கர் என்பவர், அரிஜனங்களுக்கான மானியம் அதிகப்படுத்தப்பட வேண்டுமென்பதை எடுத்துக் காட்டினார். 90 லட்சம் மக்கள் வாழும் அசாமில் 65 சத விகித மக்கள் தாழ்த்தப்பட்டவர்கள்; இவர்களுக்கு மத்திய சர்க்கார் ஐம்பதாயிரம் ரூபாய்க்கான மானியம் அளித்திருக்கிறது; ஆனால், 6 லட்சம் மக்களை உடைய மணிப்பூருக்கு எழுபதாயிரம் ரூபாய் மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அவர் எடுத்துக் காட்டினார்.

நாட்டிலே காணப்படும் தீண்டாமையை ஒழிக்க தீவிர எதிர்ப்புப் படை திரட்டினால்தான் தீண்டாமை அகற்றப்படும் என்று அவர் மேலும் வற்புறுத்தினார்.

பல நூற்றாண்டுகளாக வேதனையில் மூழ்கியிருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கு, இந்திய சர்க்கார், அகதிகளுக்கு செய்தது போல், நன்மைகள் செய்ய வேண்டுமென்றும், உயர்ந்த ஜாதி இந்துக்கள் வாழும் பகுதியில் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு வீடுகளை எடுத்துக்கொள்ள மசோதாவில் வழி செய்ய வேண்டுமென்றும் ஐதராபாத்தைச் சேர்ந்த பி. இராமசாமி என்பவர் வற்புறுத்தினார்.

இந்தக் காலத்திலும் கூட நாட்டின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறக்குறைய அடிமைகள் போன்று வாழ்கிறார்கள் என்றும், அவர்கள் வாழ்வை வளப்படுத்த தரிசு நிலங்களை சர்க்கார் அவர்களுக்குப் பங்கிட்டுத் தர வேண்டுமென்றும் அசோக் மேத்தா கூறினார்.

டாக்டர் கிருஷ்ணசாமி பேசுகையில், சட்டங்களின் மூலமே மக்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்க முடியாதென்றும், இப்போதைய மசோதாவின் நோக்கம், தாழ்த்தப்பட்டோர் மீதுள்ள வெறுப்பைப் போக்க உதவுமென்றும் குறிப்பிட்டார்.

தென் இந்தியாவில் இன்னும் பல இடங்களில் அரிஜனங்கள் பூட்சுகள் அணியவும், முழு கைச் சட்டை போடவும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும், தாழ்த்தப்பட்டோருக்கு கொடுமைகள் இழைக்கப்பட்ட பல நிகழ்ச்சிகள் தண்டிக்கப்படாமலேயே விடப்பட்டுவிட்டது என்றும், சென்னையைச் சேர்ந்த இளைய பெருமாள் எடுத்துக்காட்டினார்.

தாழ்த்தப்பட்டோரின் நலனைக் கவனிக்கவும், அரிசன முன்னேற்ற வேலைகளை மேற்பார்வையிடவும் உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்ட போர்டு ஒன்றை ஏற்படுத்துவது

(4-ம் பக்கம் பார்க்க)

திரு - கொச்சியில் பஸ் நிறுத்தம்

உண்ணாவிரதம் ஆரம்பம்

திருவனந்தபுரம், செப். 1—

திரு—கொச்சி சர்க்கார் பஸ் தொழிலாளர் சங்கத் தலைவர் தாமன், மற்றும் நான்கு சட்டசபை உறுப்பினர்கள் ஆகியோர், சர்க்கார் காரியாலயத்தின் முன்பு இன்று உண்ணாவிரதம் இருக்கத் துவங்கினார்கள்.

உண்ணாவிரதம் இருக்க வேண்டுமென்ற முடிவு, அவசரமாகக் கூட்டப்பட்ட திரு—கொச்சி சட்டசபை ஐக்கிய முன்னணிக் கட்சியின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாம்.

இந்த உண்ணாவிரதம் பற்றிக் குறிப்பிடுகையில் திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணுப் பிள்ளை, இது தொழிற் பிரச்சினையில்லை என்றும், ஜனநாயக ஆட்சிக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் செய்யும் திட்டமிட்ட முயற்சி என்றும் கூறியுள்ளார்.

பாங்கி ஊழியர்களின் — நேரடி நடவடிக்கை!

— (:) —

செப்டம்பரில் பொது வேலை நிறுத்தம் நடைபெறலாம்!

புதுடில்லி, செப். 1—

அகில-இந்திய பாங்கி ஊழியர்களின் மத்திய செயற் குழு, செப்டம்பர் 8, 9-ந் தேதிகளில் நாகபுரியில் கூடி பொது வேலை நிறுத்தத்திற்கு தேதி ஒன்றை நிச்சயிக்கும் என்று தெரிகிறது.

தொழில் அப்பீல் டிரிபியூனலின் தீர்ப்பை இந்திய சர்க்கார் மாற்றியதை எதிர்க்கும் பொருட்டே பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று தெரிகிறது.

இந்திய சர்க்காரின் போக்கினால், பெரும்பான்மையான பாங்கி ஊழியர்கள், தாங்கள் நான்கு ஆண்டு காலமாகப் பெற்றுவரும் ஊதியத்தைவிட குறைந்த ஊதியத்தைப் பெறும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதாம்!

இம்பீரியல் பாங்கி, சென்ட்ரல் பாங்கி போன்ற பெரிய பாங்கிகளில் வேலை பார்க்கும் நபர்கள், அவர்கள் தற்போது 100-ரூபாய்க்கு மேல் பெறுகிறவர்கள் என்றாலும், இப்போது அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரு 20 முதல் ரு 40 வரை இழக்க நேரிடும் என்று அகில இந்திய பாங்கி ஊழியர்கள் சங்கத் தலைவர் பிரபாத்கார், அறிக்கை யொன்றில் கூறுகிறார்.

நிலைமை இப்படி யிருக்கையில், பாங்கி ஊழியர்கள் நேரடி நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. செப்டம்பரில் பொதுவேலை நிறுத்தம் ஏற்படலாம் என்று பிரபாத்கார் கூறியிருக்கிறார்.

"ஏழாண்டுகளாக பாங்கி ஊழியர்கள் வேதனைப்படுகிறார்கள்; நீதியைப் பெற எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டுமோ அவ்வளவும் விட்டுக் கொடுத்து விட்டோம்; இனி, நேரடி நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழி எதும் இல்லை,"

என்று பிரபாத்கார் மேலும் கூறியுள்ளார்.

இந்தியன் பாங்கி ஊழியர்களின் சங்கத் தலைவர் டி. என் ராமானுஜம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், கிரியின் இராஜினாமா நியாயமானதே என்று குறிப்பிடுகிறார்.

"சுயமரியாதை உள்ள எந்த தொழிலாளர் தலைவரும் இதைத் தவிர வேறு எதையும் செய்திருக்கமாட்டார்," என்று அவர், மேலும் கூறுகிறார்.

கிரியின் இராஜினாமாவினால் பண்டித நேருவின் மந்திரிசபை பலவீனப்படும் என்பது ராமானுஜம் அவர்களின் கருத்து எனத் தெரிகிறது.

நேரு—கிரி சந்திப்பு நடைபெறவில்லை!

இந்திய சர்க்கார் தொழில் அமைச்சர் கிரியின் இராஜினாமாவை திரும்பப் பெறச் செய்யும் முயற்சிகள் பலிக்கவில்லை என்று தெரிகிறது.

முன்னர் எதிர்பார்த்தபடி கிரி, பண்டித நேருவைச் சந்திக்கவில்லை என்றும் தெரிகிறது.

தோழர் கிரி, இந்திய மந்திரி சபையின் கூட்டமொன்றில் கலந்து கொண்டாராம். இக் கூட்டம் பாங்கித் தீர்ப்புப் பற்றி விவாதிக்கவில்லை என்று தெரிகிறது.

பி.-சோ. கட்சி தலைமை கூட்டம்

தாணு பிள்ளை கலந்து கொள்ளமாட்டார்

திருவனந்தபுரம், செப். 1—

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியினரின் தேசீய நிர்வாகக் குழு கூட்டத்தில் தான் கலந்து கொள்ள இயலாது என்று பட்டம் தாணு பிள்ளை கிருபளானிக்கு தந்தி கொடுத்திருக்கிறார் என்று தெரிகிறது.

திரு — கொச்சியில் நடைபெறும் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம் காரணமாக, தான் திருவனந்தபுரத்தில் இருப்பது அவசியம் என்று பட்டம் தாணு கருதுகிறாராம்!

4-ந் தேதி பம்பாயில் நடைபெற இருக்கும் கூட்டத்தை ஒத்திப் போடுமாறும், அல்லது திருவனந்தபுரத்தில் கூட்டத்தை

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—9—54 வியாழன்

அரசியல் சூதாடிகள்!

"மக்களுக்கேற்ற அரசாங்கம்; அரசாங்கத்திற்கேற்ற மக்கள்!" என்று கூறுவர் பெரியோர்.

ஜனநாயக ஆட்சி முறையைக் கடைப்பிடிக்க முடிவு செய்துவிட்ட மக்கள் எல்லோரும், இந்த அர்த்தம் பொருந்திய வார்த்தைகளை என்றுமே நினைவில் இருத்திக்கொள்ள வேண்டியது மிக அவசியம்!

மக்கள், பொறுப்பற்றத் தன்மையிலே வோட்டுச் சாவடி சென்றால், அதன் பலன், அரசியல் பச்சோந்திகளும், அறிவு விளக்கமில்லா அதிகாரப் பிரியர்களும்தான் சட்ட சபை ஏறுவர்!

கொள்கை வழி நிற்போன் தோற்பதுகூடப் பெரிதல்ல; பின்னால், அவனைத் தோற்கடித்த கெடுமதியாளரின் தாக்குதலையும், தவறுதலையும் நாடு சமாளிக்க வேண்டும்!

ஒரு தடவை வோட்டளிக்கும்போது செய்யும் தவறு, அந்த நாட்டின் வருங்காலத்தை பல நூற்றாண்டுகளுக்குப் பாதிக்கும்!

ஜெர்மன் வரலாற்றை ஞாபகத்திற்குக்கொண்டுவந்தாலே, இந்த உண்மை நன்கு தெரியும்!

மாற்றுக் கட்சியினரையும், மூற்போக்குவாதிகளையும் தேர்தலில் தோற்கடித்த ஹிட்லர், இந்த நூற்றாண்டையே இரத்தக் கறையாக்கி, ஜெர்மனியின் வருங்காலத்தையே பாழ்படுத்திவிட்டுப் போய்விட்டான்!

தங்கள் நாட்டையும், உலக மக்களின் முன்னேற்றத்தையும் பாழ்படுத்திய ஹிட்லரின் இழிச் செயலுக்குள்ள பொறுப்பு, ஜெர்மன் நாட்டு வோட்டர்களையும் சாரும்; காரணம், அவர்கள், நாசிசக் கட்சியை ஆதரித்து வோட் செய்ததால்!

ஹிட்லரைத் தோற்கடித்த பின்னும் பல நாட்டு மக்களும் இந்தத் தவறைச் செய்யாமலில்லை!

பல நாடுகளில், பதவியில் அமர்த்தப்பட்டவர்கள், அதிகாரப் பிரியர்களும், சமாதானத்திலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கையற்றவர்கள்!

அமெரிக்காவில், அதிகாரத்தில் அமர்த்தப்பட்டவர்கள் ஆதிக்க வெறியர்களாகவும், பொதுவுடைமையின் நம்பிக்கையின்மை மாத்திரமல்ல—தனி உடைமைக்காவல் யோராடும் முதலாளித்துவப் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர்!

ஆங்கில நாட்டிலே அமர்த்தப்பட்டிருப்பவர்கள், பழம் பெருமையை மறக்காமல், அமெரிக்காவிற்கு முன்னோடும் பின்னேயாக இருப்பது தான் இந்த நிலைமையின் முடியும் என்று தன்னம்பிக்கை அற்றவர்கள்!

பிரெஞ்சு நிலையோ, ஜனநாயகத்தையே கேலிக் கூத்தாக்கும் அளவில் இருக்கிறது!

"ஒரு பகுதியினர் எதிர்த்துக்கொண்டே இருப்பது; மற்றொரு பகுதியினர் பதில் சொல்லிக் கொண்டே இருப்பது!—இப்படிப்பட்ட நாட்டின், முன்னேற்றம் ஏற்படக் கட்டாயம் பல ஆண்டுகள் பிடிக்கும்," என்று ஜனநாயகத்தில் ஏற்படக்கூடிய கால விரயத்தைப் பற்றிக் கூறுவர்!

பிரெஞ்சு நாட்டிலோ அதைவிட மோசமான நிலை; ஏழெட்டு பெரிய கட்சிகள்; சட்டசபையில் அத்தனைக் கட்சிகளும் பிரதிநிதித்துவம் எண்ணிக்கையில் பெரும் அளவு கொண்டிருக்கின்றன; ஆகவேதான், எந்த விஷயத்திலும் ஒன்றுபட்ட அபிப்பிராயமே இந்த எட்டாண்டுகளில் நிலவ முடியவில்லை!

ஐரோப்பிய பாதுகாப்புத் திட்டம் சென்ற இரண்டரை ஆண்டுகளாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இதை ஒத்துக்கொண்டால்தான், தான் பண உதவி செய்ய முடியுமென்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொண்டிருந்தது.

நாளுக்கொரு சர்க்காராக மாறிக்கொண்டிருந்த பிரெஞ்சு அரசாங்கம், எந்தத் திட்டமான பதிலையும் கூற முடியாமல், இத்தனை நாட்கள் இந்தப் பிரச்சினையைத் தள்ளிப் போட்டுக்கொண்டிருந்தது.

இதற்கிடையில், இந்தத் திட்டத்தைப் பற்றி மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சட்டசபைகளில் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, நேற்று முன்தினம் கூடிய பிரெஞ்சு பார்லிமெண்டு, இந்தத் திட்டத்தை அறவே நிராகரித்துவிட்டது!

இதனால் ஏற்படும் பலாபலன்கள்—அமெரிக்காவின் நிலைமை, ஐரோப்பிய நாடுகளின் சிக்கல், பிரிட்டனுக்கு வரக்கூடிய பெரும் பொறுப்புகள் இவைகள் ஒருபுறமிருக்கட்டும்; இந்த மாதிரி, எந்த விஷயத்திலும் ஒன்றுபடாமல், கொள்கையில் கோபுர அளவு வித்தியாசமுள்ளவர்கள் அத்தனைப் பேரையும் மக்கள் சபைக்கு அனுப்பியதன் காரணத்தால், பிரெஞ்சு மக்கள், தங்கள் நாட்டிற்கும், முன்னேற வேண்டிய உலகத்திற்கும் செய்த கெடுதல் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

பிரெஞ்சு, அமெரிக்க நிலை இப்படி இருக்க, வேறு சில நாடுகளில் மக்கள் மிக பிற்போக்குவாதிகளைத் தேர்ந்தெடுப்பதை இன்றும் காண்கிறோம்.

ஹிட்லர், அரசியல் கொள்கையற்றவனானாலும் போல சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், ஆண்டான்—அடிமை முறையை நீடிக்கச் செய்யும் திட்டமிடும் முதலாளித்துவ எண்ணம் கொண்டவர்களையும் சில நாட்டு மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர்.

பிற்போக்கு எண்ணம் கொண்டவர்களும், அதிகார ஆசை பிடித்தவர்களும் மக்களாட்சியில் இடம் பெறுகின்றனர்.

கொள்கைக்கு உயிர் விடும் ஊழியர்கள், சட்ட மன்றம் ஏறி, மக்களுக்கு நலன் செய்ய முடியாதவாறு தோற்கடிக்கப் படுகின்றனர்!

சட்ட மன்றம் ஏறியவர்கள், சுயநலவாதிகளாக, தங்கள் நன்மை தேடிச் செல்கின்றனர்!

நேற்று முன்தினம் நம் நாட்டு டெல்லி சட்டசபையில், 35 பிரதிநிதிகள்கூட இல்லையாம்! 500 பேர் கொண்ட சட்டசபை அது!

அப்படியானால், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு எந்த அளவில் இருக்கிறது, என்று எண்ணிப் பாருங்கள்!

உறுப்பினர்கள் மிகக் குறைந்த சட்டசபை கூட்டங்களும், மந்திரிகளே இல்லாத சட்டசபைக் கூட்டங்களும் நாட்டிலே அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சியாகிவிட்டது!

"டெல்லி சட்டசபையிலே நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் எந்த நடவடிக்கைகளிலும் கலந்து கொள்வதில்லை," என்று, நேற்று பேசிய தோழர் காமத்கூட கூறியிருக்கிறார்.

எப்படிப் பேசுவார்கள்? டெல்லிக்கு செல்ல மக்களிடம் அனுமதி கேட்ட அத்தனை பேரும் அரசியலில் கொள்கை கொண்டவர்கள் அல்லவே!

மக்களிடம் தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை அர்த்தமற்றவை என கருதி, இன்று பல்வேறு கூட்டுக் கட்சிகளில் சேர்ந்து, வெவ்வேறு அரசியல் போர்வை போர்த்திக் கொள்ளும் சந்தர்ப்பவாதிகள் தானே! அரசியல் வானில் அவர்கள்தான் இன்று தைரியமாக உலவுகின்றனர்!

இதற்கெல்லாம் காரணம் என்ன?

மக்கள், வோட்டுச் சாவடி செல்லும்போது, அரசியல் சூதாடிகளின் வார்த்தையில் ஏமாந்து போனதால்! அவர்களின் உதடுகள் பேசிய பேச்சில் நம்பிக்கை வைத்ததால்!

ஆகவேதான் 'மக்கள் எப்படியோ, அப்படியே அரசாங்கம்,' என்றனர் பெரியோர்!

மக்களாட்சி முறை மக்களிடம் மகத்தான பொறுப்பைத் தந்திருக்கிறது.

கருத்தறிந்து, கயவனை நீக்கி, கொள்கை சுத்தமும், குடி மக்களின் நன்மையை நாடுபவனையுமே பொதுச் சபைகளுக்கு அனுப்பவேண்டும்.

இந்த மகத்தான பொறுப்பை சரியானபடி நிறைவேற்றினால்தான், மக்கள் நல்லதொரு அரசாங்கத்தைப் பெற முடியும்; அதன் மூலம் நாட்டு நலத்தைப் பெருக்க முடியும்; செல்வத்தை வளர்க்க முடியும்.

இந்த நல்ல சூழ்நிலையை உண்டாக்க வேண்டியது மக்களாட்சி முறையில் நம்பிக்கை வைத்திருக்கும் நாட்டு மக்களுடைய, அரசியலில் கொள்கை வழி நிற்போருடைய முழு கடமையாகும்.

இதை விடுத்து, தேர்தல் காலத்திலே எவனெவன் ஜெயிப்பான் என்று பார்த்து,

பணக்காரர்களின் பாசறை, ஏழைக்கு நன்மைசெய்வதெப்படி?

ஏழாண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி சாதித்தது என்ன?

பூந்தோட்டத்தைத் தந்துவிட்டுச் சென்றானே ஆங்கிலேயன்!

காங்கிரஸ் ஆட்சியின் திறமையின்மை பற்றி பொதுச்செயலாளர் அண்ணாதுரை

"கடந்த ஏழாண்டுகளில் காங்கிரஸ் ஆட்சி சாதித்ததை என்ன? காங்கிரஸ் நண்பர்கள், தங்கள் திறமைக் குறைவை திரையிட்டு மறைக்க, 'ஆட்சிக்காலம் ஏழாண்டுகள்தானே; அது போதாது; இன்னும் பொறுத்துக் கொள்ளுங்கள்; பசி போக, பட்டினி மறைய, பஞ்சம் தொலைய இன்னும் பொறுத்திருங்கள்,' என்று பேசுகிறார்கள்!

"மற்ற நாடுகளில் எல்லாம் ஏழாண்டுகளில் எத்தனை சாதனைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தால் இவர்கள் கூற்று உண்மைதானா என்பது தெரிய வரும்," என்று பொதுச்செயலாளர் அண்ணா குறிப்பிட்டார்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 29—8—54-ல், கல்லக்குடி தி. மு. கழக ஆண்டு விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி 31—8—54 அன்று வெளியாகியது. மிகுந்த பகுதி இன்று வெளியிடப்படுகிறது:—

கடந்த உலக யுத்தத்தின் போது, ஜெர்மனி, ரஷ்யா, இத்தாலி, பிரிட்டன், பிரான்ஸ், கிரீஸ் போன்ற நாடுகள் எல்லாம் பலத்த சேதங்களை அனுபவித்தன.

ரஷ்யாவும், பிரிட்டனும், ஜெர்மனியும், தரைமட்டமாக்கப்பட்ட நகரங்களையும், பாழான மாளிகைகளையும், இடிந்துபோன தொழிற்சாலைகளையும், இந்த யுத்தம் முடிந்த ஏழாண்டுக் காலத்தில் எழில்மிகு நாடுகளாய் யுத்த காலத்திற்கு முன்பிருந்ததைவிடச் சிறப்புற்ற நாடுகளாய், தூக்கி நிறுத்தி விட்டன.

ஆனால், வெள்ளையன் இந்த இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு வெளியேறும்போது இந்த நாட்டை என்ன சுடுகாடாகவா ஆக்கிவைத்து விட்டுப் போனான்?

பூந்தோட்டத்தை குத்தகைக்கு எடுத்தவன், மலரைப் பறித்து அனுபவித்துவிட்டு, குத்தகை காலம் முடிந்ததும் பூச்செடிகளை அழிக்காது, தோட்டத்தைத் தந்துவிட்டுச் செல்வது போன்றே, வெள்ளையனும் இந்த நாட்டை 150 ஆண்டுகள் கொடி கட்டி ஆண்டு விட்டு, ஆண்ட காலத்தில் சுரண்டிக் கொண்டு,

போகும்போது நாட்டை அப்படியே தந்துவிட்டுத்தான் சென்றான்; அது மட்டுமின்றி, இந்த நாட்டு மக்களிடம் இரயிலையும், இராணுவத்தையும், விமானத்தையும், கப்பலையும் தந்துவிட்டுச் சென்றான்.

காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடமேறிய பின், எதை மாற்றினார்கள்? எதை மாற்றி, சீர்படுத்தி, செப்பனிட்டு சிறப்பெய்தச் செய்யும் திறன் இவர்களுக்கு இருந்தது?

கார்டு அளவிலிருந்து 'கான்ஸ்டபின் டிரஸ்' வரை, சட்டப் புத்தகம் முதல் பாலர் பள்ளிப் புத்தகம் வரை எதை இவர்கள் மாற்றினார்கள்?

எந்தக் காரியம் சாதிப்பதில் இவர்கள் திறமையைக் காட்டினார்கள்?

எனவே, இவர்கள், கடந்த ஏழாண்டு காலத்தில் ஏழைகளுக்கு ஏதும் செய்ய முடியாமற் போனதற்குக் காரணம், இவர்களின் திறமையின்மையே தவிர, காலம் போதாது என்பதல்ல!

மேலும், இன்று காங்கிரஸ், பணக்காரரின் பாசறையாக, முதலாளிகளின் முகாமாக மாறிவிட்டது. எப்படி அது ஏழைகளுக்கு நன்மை செய்ய முடியும்?"

என்று, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டு, தென்னாட்டைப் பொறுத்த வரையில், வடநாட்டுடன் ஒட்டிக்கொண்டிருப்பது எந்த வகையிலும் லாபமல்ல, சரியானதுமல்ல, தேவையானதுமல்ல என்பதை புள்ளி விவரங்களுடன் விளக்கி, தென்னாட்டு மக்கள் நல்வாழ்வு பெற்று, வாழ்வின் மூன்று அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் இவற்றை தங்கு தடையின்றி பெற, 'திராவிடம் திராவிடருக்காக வேண்டும்,' என்று கூறியதுடன், திராவிடம் திராவிடர்க்கானது தவறு என்று பேசுகிறவர்களின் போக்கையும் பொதுமக்களுக்கு உணர்த்தி, அவர்கள், அடிக்கடி மாறி மாறிச் சொல்லிக்கொண்டிருப்பவர்களின் நாணயமற்ற செயலையும் அம்பலமாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அவனுக்குக் கதர்ச் சட்டையைப் போட்டு நிற்கவைப்பது, அரசியல் நேர்மையல்ல என்பது மாத்திரமல்ல; நாட்டிலே வளர்ந்து வரும் நல்ல தோர் ஜனநாயக சக்தியை அழிப்பதுடன், அரசியல் ஒழுக்கத்தையும் பாழ் செய்வதாகும்.

துகிலுரிந்த அச்சாதனன் மஞ்சள் பூசுகிறான் என்பது தான் மிகப் பொருத்தமான உதாரணம்! சிந்தித்துத் தெளிவு பெறவேண்டிய உதாரணம்!

நாட்டிலே ஒழுங்கீனம் வளராமலிருக்க, அரசியலில் அக்கறை கொண்டோர் அனைவரும், இதைக் குறித்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

மேலும் பலர் சாட்சியமளித்தனர்

வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணை

20—8—54-ல் நடைபெற்ற தூத்துக்குடி சதி வழக்கு விசாரணையில், சர்க்கார் தரப்பில் சாட்சியமளித்த டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட், எதிர்தரப்பு வழக்கறிஞர் திரு. செல்லையப்ப பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விவரம் நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; அந்தக் குறுக்கு விசாரணையின் தொடர்பு தரப்படுகிறது:—

வழக்கறிஞர் திரு. செல்லையப்ப பிள்ளையின் குறுக்கு விசாரணையில், டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்ட் மேலும் கூறியதாவது:—

தி. க., தி. மு. கழகம் இரண்டும் 'கருப்புச்சட்டை'க்காரர்கள் தான்; 3, 4 எதிரிகள் பிளாட்பாரத்துக்குள் வரும்பொழுது, கருப்புச்சட்டையோ, 'பாட்ஜோ' அணிந்து வரவில்லை; பிளாட்பாரத்துக்கு வந்த ஒருவர்கூட கருப்புச் சட்டை அணிந்து கொள்ளவில்லை; யாருமே, கருப்பு அணிந்து வந்ததாக எனக்கு தெரியவில்லை; காலை 8-45 வரை மேலூர் ஸ்டேஷனில் இருந்தேன்; தண்டவாளத்துக்கு இருபுறமுமுள்ள வேலிக்கு வெளியேதான் அந்த 2000 பேர் கூட்டம் இருந்தது; கீழ்க் கோர்ட்டில், ரயில்வே லைனில் இருபுறமும் கூட்டம் இருந்ததாகச் சொன்னேன்; கீழ்க் கோர்ட்டு வாக்குமூலம் உண்மைதான்; நான் உட்கார்ந்திருந்தவர்கள் பக்கம் போய்ப் பேசினேன்; அந்தக் கூட்டத்தில் கருப்பு சட்டையோ, 'பாட்ஜோ' அணிந்தவர் ஒருவரையும் பார்க்கவில்லை; தடியடிப் பிரயோகம் ஆரம்பித்த பிறகுதான் கல்லெறி ஆரம்பித்தது; பத்திரிகை நிருபர்கள் 3 அல்லது 4 பேர் நின்றதையும் நான் கவனித்தேன்; அவர்கள் பெயர் தெரியாது; அவர்கள் எல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார்கள்; உட்கார்ந்திருந்தவர்கள், இருமுறை தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டார்கள்; பலமான அடிதான்; 5 அல்லது 6 பேர் காயப்பட்டார்கள்; எச்சரிக்கை கொடுத்த ரிசர்வ் போலீசாரின் நெம்பரானது, பெயரானது எனக்கு தெரியாது; ஸ்ரீனிவாசகம் பிள்ளை என்பவர், அவர் வீட்டு வராந்தாவில் சுடப்பட்டார்; புதுக்கிராமத்தில் நான் சுற்றிப்பார்க்கும்பொழுது யாரும் என்னிடம் முறையிடவில்லை; புதுக்கிராமத்தைச் சுற்றிய பிறகு பந்தோபஸ்து ஏற்பாடு செய்தேன்; புதுக்கிராமத்தில் நடந்த விபரங்களை என் 'டைரி'யில் குறித்துக் கொள்ளவில்லை; புதுக்கிராமத்தில் ஒரு பெருமாள் கோவில் இருக்கிறது; அது, 4 தெருக்கள் சந்திக்குமிடத்தின் பக்கத்தில் இருக்கிறது; 15 நிமிடங்களுக்கு ஒரு முறை அவ்வழியாக டவுன் பஸ்கள் போகிறது; 5 நிமிட நேரம், தீ வைக்கப்பட்ட பாலத்தைப் பார்வையிட்டோம்; 2 கட்டைகள் எரிந்தது—19 ஆணிகள் கழன்ற விஷயங்களை, நான், 'டைரி'யில் குறித்துக் கொள்ளவில்லை; ஸ்தலத்துக்குப் போன பிறகு மாலையில் புதுக் கிராமத்துக்குப் போனேன்; சரியான நேரம் கூற முடியாது; 5-லிருந்து 6 மணிக்கு இடையில் இருக்கும்; அந்த நேரத்தில் புதுக்கிராமவாசிகள் ஒருவராவது என்னிடம் முறையிடவில்லை; நான் மட்டும்தான் ஊரைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு வந்தேன்; தெப்பக்குளம் தெருவையும் 1 அல்லது 2 தடவைகள் சுற்றிப் பார்த்தேன்; அங்கும் எவரும் என்னிடம் வாய் மூலமோ, எழுத்து மூலமோ முறையிடவில்லை; 2 அல்லது 3 தடவைகள் கிழக்கு ரதவீதி, பெரிய கடைத் தெருவுக்கும் போனேன்; அங்கும் எவரும் புகார் செய்யவில்லை; 1-லிருந்து 5 எதிரிகளைக் கைது செய்ய வாய்மூலம்தான் உத்தரவு கொடுத்தேன்."

வழக்கறிஞர் பி. என். கந்தையா நாடார் குறுக்கு விசாரணையின் போது, சாட்சி கூறியதாவது:—

"கைது செய்யப்பட்ட 33 பேர், போலீசாரால் என்னிடம் கொண்டுவரப்பட்டார்கள்; மாமன்னன் வரவில்லை; என்னுடைய முன்னிலையில்தான் கைது செய்யப்பட்டார்கள்; 3, 4 எதிரிகள் ஸ்டேஷனுக்கு வெளியே இருந்த விலாஸ் காபி ஓட்டலில் கைது செய்யப்பட்டார்கள் என்று கூறுவது சரியல்ல; ரயில் நிறுத்தம் செய்யப் போவதாக தி. மு. கழக உறுப்பினர்களிடமிருந்து எழுத்து மூலம் எனக்கு எந்தத் தகவலும் கிடையாது."

மீண்டும் சர்க்கார் வக்கீல் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

"நான் சுற்றிப் பார்க்கும் போது, எங்கும் இறங்கிப்பார்க்கவில்லை; ஏனென்றால், பல இடங்களுக்குப் போகவேண்டியது இருந்தது."

★

15-வது சாட்சியாக கருப்பசாமி பிள்ளை, சர்க்கார் தரப்பு சார்பில் விசாரிக்கப்பட்டபோது கூறியதாவது:

"நான் மேலூர் ரங்கநாதர் பிள்ளை தெருவில் குடியிருக்கிறேன்; மேலூர் ஸ்டேஷனுக்கு தென்புறம்; 15—7—53-ந் தேதி கோவிலுக்குக் கும்பிடப் போனேன்; ஸ்டேஷனுக்கு மேல்புறமுள்ள பிள்ளையார் கோவிலுக்குப் போனேன்; திரும்பி வரும்பொழுது ஸ்டேஷனில் பெரிய கூட்டம் இருந்தது; 7 மணி இருக்கும்; தண்டவாளத்தில் 200 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; 'ராஜாஜி ஆட்சி ஒழிக,' 'நேரு சர்க்கார் ஒழிக,' என்ற கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள்; வேலிக்கு தென்புறமும், வடபுறமும் மற்ற கூட்டம் இருந்தது; உட்கார்ந்திருந்தவர்களுக்கு, கூட்டத்திலுள்ளவர்கள், தண்ணீர், மிட்டாய் கொடுத்தார்கள்; 7 அல்லது 7½ மணிக்கு சப்-கலெக்டர் வந்தார்; நடராசனைக் கூப்பிட்டுப் பேசினார்; பிறகு நடராசன் கூட்டத்துக்குள் போனார்; பிறகு தடியடிப் பிரயோகம் செய்தார்கள்; கொஞ்ச நேரம் கழித்து ஜில்லா கலெக்டர் வந்தார்; நடராசனிடம் பேசிக் கொண்டிருந்தார்; பிறகு, நடராசன் கூட்டத்துக்குள் வந்துவிட்டார்; மலபார் போலீசார், மறியல் செய்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்; கல்லெறி விழுந்தது; பிறகு ஒரு போலீசார், சுடப் போவதாக எச்சரிக்கை செய்தார்; நான் பத்திரகாளியம்மன் கோவிலில் நின்று அதைக் கேட்டேன்; பிறகு சுட்ட சத்தத்தைக் கேட்டேன்; பிறகு ரயில் புறப்பட்டது; ஆட்கள் எல்லோரும், நாலா திசையிலும் போய்விட்டார்கள்; என்னை இன்ஸ்பெக்டர் விசாரித்தார்."

சாட்சியை, வழக்கறிஞர் எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது, சாட்சி கூறியதாவது:—

"நான் 3 வருடமாக காங்கிரஸ் மெம்பர்; கதர்தான் அணிவது; தி. மு கழகம், காங்கிரசுக்கு எதிர்க் கட்சியா என்பது தெரியாது; கீழ்க் கோர்ட்டில், தி. மு. கழகம், காங்கிரசுக்கு எதிர்க் கட்சி என்று சொன்னதாக ஞாபகமில்லை; 15 வருடமாக கோவில் தரிசனத்துக்குப் போய் வருகிறேன்; கோவில் பட்டர் தெரியும்; பெயர் தெரியாது; அன்று கோவில் திறந்திருந்தது; பிள்ளையார் கோவிலில் 5 நிமிடம் நின்றேன்; வேறு யாரும் கிடையாது; நான் நின்றது வேறு யாருக்கும் தெரியுமாவென்று சொல்ல முடியாது; பிள்ளையார் கோவில் பக்கம் நின்று பார்த்தேன்; நான் பிள்ளையார் கோவிலுக்கு வரு முன்னே ரயில் நின்றது; கோவிலுக்குப் போகும் கூட்டம் இருந்ததைக் கவனிக்கவில்லை; கீழ்க்கோர்ட்டில், கோவிலுக்குப் போவதற்கு முன்னே 2000 பேர் கூட்டம் இருந்ததாகச் சொன்னது ஞாபகமில்லை; சுமார் 2 மணி நேரம் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்; நான் நின்ற இடத்திலெல்லாம் ஏகக்கூட்டம்; அந்தக் கூட்டத்தில் ஒருவரையும் எனக்குத் தெரியாது; கூட்டத்தில் நின்றவர்கள் என்னிடம் பேசவில்லை; நானும் பேசவில்லை; வீட்டுக்குப் போகும் வழியிலும் ஒருவரையும் சந்திக்கவில்லை; தெற்கு வேலிக்குப் பின்பக்கம் 7 வீடுகள் இருக்கின்றன; அந்த வீட்டுக்கு முன்னர் வராந்தா இருக்கிறது; அதில் ஆட்கள் நின்றதைக் கவனிக்கவில்லை; 5-வது எதிரி நடராசனை 15 வருடமாக எனக்குத் தெரியும்; அன்று நடராசன் கருப்புச் சட்டை போட்டிருக்காரா என்பது ஞாபகமில்லை; 200 பேரும் பல கட்சியைச் சேர்ந்தவர்களா என்று தெரியாது; கதர்க் குல்லாய், கதர்ச் சட்டை போட்டவர்கள் இல்லை; கருப்புச் சட்டைக்காரர்களையும் நான் கவனிக்கவில்லை; சிகப்பு சட்டை போட்டவர்களையும் கவனிக்கவில்லை; நான் நின்ற பக்கமிருந்து ஒருவரும் கல் வீசவில்லை; ஆண்டாள் தெருவிலிருந்தும் கல்லெறி விழவில்லை; தென் பக்கம் நின்றவர்களில் சிலருக்குத் துப்பாக்கிப் பிரயோகத்தால் காயமென்று பின்னால் தெரியும்; சுடப் போகிறார்களென்றவுடன் மனதில் பயம் ஏற்பட்டது; இன்ஸ்பெக்டர் ராஜூவை சம்பவத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்னால் தெரியும்; கிருஷ்ணய்யர் 15-7-53க்கு முன்னால் தெரியும்; என்னை விசாரித்தவர் இன்ஸ்பெக்டர் ராஜூ; கிருஷ்ணய்யர் எந்தக் காலமும் என்னை விசாரிக்கவில்லை; ராஜாஜி கல்வித் திட்டத்துக்கு என் பூரண ஆதரவு உண்டு."

வழக்கறிஞர் பி. என். கந்தையா குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

"சுடப் போகும் எச்சரிக்கையை, இன்ஸ்பெக்டர் விசாரணையில் கூறியிருக்கிறேன்; காங்கிரஸ் கூட்டத்துக்குப் போவேன்; சம்பவத்துக்குப் பிறகு நடராசனை நான் பார்க்கவில்லை; மேலூர் ஸ்டேசன் பிளாட்பாரம் 200 கெஜம் நீளமிருக்கும்."

★

16-வது சாட்சியாக சர்க்கார் தரப்பில் சுடலைமுத்து தேவர் விசாரிக்கப்பட்டபோது சாட்சி கூறியதாவது:

"நான் ரிசர்வ் போலீஸ் ஜமேதார்; எனக்குக் கீழ் பத்து போலீஸ்காரர் உண்டு; நான் ரயில் பந்தோபஸ்துக்காக 1953 ஜூலை 15-ந் தேதி தூத்துக்குடிக்கு போனேன்; கீழூர் ஸ்டேஷனில் காலை 6-20 மணிக்கு வண்டி புறப்பட்டு மேலூர் வரும் வரை வண்டி 4 தடவை நிறுத்தப்பட்டது; நாங்களும், சப்-இன்ஸ்பெக்டர் மாமன்னனும் பந்தோபஸ்துக்காக வண்டிக்கு வலதுபுறம் நடந்து போனோம்; சங்கிலியை இழுத்ததால் வண்டி நின்றது; மேலூருக்கு 7 மணிக்கு வண்டி வந்தது; பிறகு ஒரு பர்லாங் போனதும் வண்டி நின்றது; லைனில் சுமார் 150 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; உள்ளும் வெளியும் (லைனுக்கு) கூட்டம் இருந்தது; உட்கார்ந்திருந்தவர்களைப் போகும்படி சொன்னேன்; அவர்கள், 'நேரு, ராஜாஜி சர்க்கார் ஒழிக,' என்று கோஷம் போட்டு போக மறுத்தார்கள்; கூட்டத்திலுள்ளவர்கள், சத்தம் போட்டு கல் எறிந்தார்கள்; சப்-கலெக்டர் வந்தார்; போகச் சொன்னார்; யாரும் கலையவில்லை; அவர், தடியடிப் பிரயோகம் செய்ய உத்திரவிட்டார்; பின்னர் தடியடிப் பிரயோகம் நிறுத்தப்பட்டது; எட்-கான்ஸ்டபிள் 535 எச்சரிக்கை கொடுத்தார்; யாரும் கலையவில்லை; தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது; லைனில் சிலர் படுத்துக் கொண்டார்கள்; ஜில்லா கலெக்டர் வந்தார்; மலபார் போலீசும் இருந்தது; கூட்டத்தைக் கலைந்து போகச்சொன்னார்; போகவில்லை; கூட்டம் முன்னேறியது; கற்களும் விழுந்தன; கலெக்டர் சுட உத்தரவு கொடுத்தார்; எச்சரிக்கைக்குப் பிறகு நாங்களும் மலபார் போலீசும் சுட்டோம்; பிறகு கூட்டம் கலைந்து, வண்டி புறப்பட்டது; போலீஸ் கான்ஸ்டபிள்கள் 1864, 1773 இரண்டு பேருக்கும் காயமுண்டு; இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; கைதுசெய்தவர்களில் நடராசனை மட்டும் காட்ட முடியும்."

வழக்கறிஞர் செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணையின் போது சாட்சி கூறியதாவது:—

"வண்டி போவதற்கும் நாங்கள் நடந்து போவதற்கும் ஒன்று போல் இருந்தது; அரை மணி நேரத்தில் வண்டி கீழூரிலிருந்து மேலூர் வந்தது; நாங்கள் வண்டிக்குள் ஏறவில்லை; வண்டி போவதற்கு முன்னாலே கூட்டம் இருந்தது; கீழ்க் கோர்ட்டில், வண்டி வந்த பிறகு எவ்வளவு நேரத்தில் கூட்டம் சேர்ந்தது என்று சொல்ல முடியாது எனச் சொன்னது ஞாபகமில்லை; மேலூர் ஸ்டேஷனில் வண்டி 2, 3 நிமிடம் நின்றிருக்கும்; நாங்கள் போன பிறகுதான் உட்கார்ந்தார்கள்; உட்கார்ந்தவர்களில் கருப்பு, சிகப்பு, கதர் சட்டைக்காரர்கள் உண்டா என்று நான் கவனிக்கவில்லை; உட்கார்ந்தவர்களுக்கும் எஞ்சினுக்கும் இடையில் 15 அடி தூரமிருக்கும்; உட்கார்ந்திருந்தவர்கள்மீது ஒரே தடவைதான் தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது; 4, 5 நிமிடம்தான் தடியடிப் பிரயோகம் நடந்தது; கீழ்க் கோர்ட்டில் 10, 15 நிமிடம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக சுமாராகக் கூறியிருப்பேன்; தடியடிப் பிரயோகம் செய்யும்பொழுது கல்லெறி கிடையாது; பிறகுதான் கல்லெறி விழுந்தது; ஜில்லா கலெக்டர் வருவதற்கு முன்தான் கல்லெறி விழுந்தது; எட்-கான்ஸ்டபிள் எங்கள் ரிசர்வைச் சேர்ந்தவர்தான்; கைது செய்யப்பட்டவர்கள் கருப்புச் சட்டை பாட்ஜ் அணிந்திருந்தது தெரியாது; 5-வது எதிரி நடராசனை 10 வருடமாகத் தெரியும்; அவர் பெயர் தெரியும்; இன்ஸ்பெக்டர் என்னை 16-ந் தேதி விசாரித்தார்; இன்ஸ்பெக்டர் விசாரிக்கும்பொழுது 5-வது எதிரியின் பெயரைச் சொல்லியிருக்கிறேன்; 5-வது எதிரியை, அதிகாரிகள் முன்பு அடையாளம் காட்டவில்லை; ஜில்லா கலெக்டர் வந்தபிறகு கல்லெறி இருந்தது; ஒருவருக்கும் காயம் இல்லை."

எதிரிகள் சார்பாக வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமி நாடார் சாட்சியை விசாரித்தபோது சாட்சி கூறியதாவது:

"மேலூரில் வண்டி நிற்கும்பொழுது, எஞ்சினையொட்டி ஆட்கள் இல்லை; 150 அடிக்குமேற்கே உட்கார்ந்து கொண்டும் நின்று கொண்டுமிருந்தார்கள்; 100, 150 பேர் உட்கார்ந்திருந்தார்கள்; வண்டி புறப்படுமுன் உட்கார்ந்திருந்தவர்களை அப்புறப்படுத்த முயற்சி எடுத்தது எனக்குத் தெரியாது; வண்டி 10 பர்லாங் போய் நின்றது."

★

23—8—54 விசாரணை

23—8—54ல், தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. இராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில் மீண்டும் தொடர்ந்து ஆரம்பமாயிற்று.

சர்க்கார் தரப்பு 17-வது சாட்சியாக ரிசர்வ் போலீஸ் குட்டிகிருஷ்ணன் நாயர் விசாரிக்கப்பட்டார்.

சர்க்கார் வக்கீல் விசாரித்த பின், எதிரிகள் தரப்பில், வழக்கறிஞர் எம். செல்லையப்ப பிள்ளையின் குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:

"எனக்கு பட்ட காயங்களை நான் யாருக்கும் காட்டவில்லை; கலெக்டர் எப்பொழுது வந்தாரென எனக்குத் தெரியாது."

வேறு குறுக்கு விசாரணை இல்லை.

★

18-வது சாட்சியாக ரிசர்வ் போலீஸ் கந்தசாமி சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக எம். செல்லையப்ப பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:

"கல்லெறி விழும்பொழுது ஒருவரும் ரயில்வே வேலி பக்கம் வரவில்லை; கல்லெறி விழுகையில் ஒரு கூட்டம் தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்களோடு கலந்தது என்று கீழ்க் கோர்ட்டில் கூறியது எனக்கு ஞாபகமில்லை; ரயில்வே காம்பவுண்டுக்குள் 2000 அல்லது 2500 பேர் இருந்ததாகக் கூறியதும் ஞாபகம் இல்லை; நான் கல்லெறி வந்த பக்கம் பார்த்து சுட்டேன்; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்களைப் பார்த்து நான் சுடவில்லை; கீழ்க் கோர்ட்டில் ரயில்வே தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் மீது சுட்டேன் என்று சொன்னது ஞாபகமில்லை; சுட்டதால் யாரும் இறந்தார்கள் அல்லது காயப்பட்டார்கள் என்று என்னுல் சொல்ல முடியாது; 2 அல்லது 3 பேர், சுடப்பட்ட காயத்தால் ரயில்வே தண்டவாளத்துக்கு வெளியே உள்ளதை நான் பார்த்தேன்; வேலிக்குத் தெற்கே, வீட்டு வராந்தாவில், ஒருவர் சுடப்பட்டு இறந்ததைப் பார்த்தேன்; அங்கே டாக்டர் வந்தது எனக்குத் தெரியாது; 17-வது சாட்சி, டாக்டரிடம் காயத்தைக் காட்டியதும் எனக்குத் தெரியாது."

★

19-வது சாட்சியாக ராமசாமி ஐயர், சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டபின் எதிரிகள் தரப்பில் சாட்சியை எம். செல்லையப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் ஒரு தீவிரமான காங்கிரஸ்வாதி; காங்கிரஸ் கட்சி அதிகாரத்துக்கு வந்தபிறகு நான் கௌரவ நீதிபதியாக இருக்கிறேன்; எந்தக் கூட்டமாவது, 'நேரு சர்க்கார் ஒழிக; நான் சென்ன நேரு ஒழிக; பார்ப்பனர் ஆட்சி ஒழிக,' என்று இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை; 'வக்கீல் ராமசாமி ஐயர் வீட்டுக்கும் போவோம்; அவர் மகன் பற்றி விசாரித்தேன்,' என்று இன்ஸ்பெக்டரிடம் கூறியதாக எனக்கு ஞாபகமில்லை; எனக்கு 5-வது எதிரி நடராசனை 1½ வருட காலமாகத் தெரியும்; எனக்கு தி. மு. கழகம் பற்றி தெரியும்; காங்கிரசுக்கு எதிர்க் கட்சி தி. மு. க.; இன்ஸ்பெக்டரிடம், நடராசனை எனக்குத் தெரியுமென்றே, அவர் முனிசிபல் கவுன்சிலர்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கையிலிருந்து வெளியேற்றம் ஆரம்பமாகி விட்டது!

நாள்தோறும் சராசரி 20 பேர் தாயகம் திரும்புகின்றனர்!

இலங்கையில் நிலவும் பாதுகாப்பற்ற தன்மையே காரணம்!

கொழும்பு, செப். 1— அக்டோபர் திங்கள் வரையில் இலங்கையைவிட்டு வெளியேற காலம் இடம் தருகிறது என்றாலும், இலங்கைவாழ் திராவிடர்கள், இலங்கையை விட்டு வெளியேற ஆரம்பித்து விட்டனர் என்று தெரிகிறது. நம்பிக்கையான இடங்களிலிருந்து கிடைக்கும்செய்திகளின்படி, நாள்தோறும், சராசரி 20 பேர் இலங்கைத் தீவைவிட்டு வெளியேறி, தலைமன்னார் வழியாக இந்திய எல்லைக்கு வருகின்றனர் என்று தெரிகிறது.

இவர்களில் சிலர், தற்காலிக பர்மிட்டுடன் உள்ளவர்கள்; சிலர், தற்காலிக வாச பர்மிட்கள் காலாவதியானவர்கள் என்று தெரிகிறது.

இலங்கைத் தீவில் இந்தியர்களுக்கு இருந்தும் பாதுகாப்பற்றதன்மையும், இனிமேல் அத்தீவின் தங்களது வாழ்க்கை முன்னேற்றத்திற்கு சந்தர்ப்பம் ஏதும் இல்லை என்ற நிலைமையும்தான் இந்த வெளியேற்றத்திற்குக் காரணம் என்று தெரிகிறது.

வேலைக்காரர்களாக இருக்கும் பலரிடையே இந்த மனப்பான்மைதான் காணப்படுகிறதாம்.

ஐந்தாண்டுத் திட்டம் — பாதிக்கப்படுகிறது!

வெள்ளத்தால் ரூ. 50 கோடி சேதம்!

மனமுடைந்த மக்களின் வேதனைக் குரல்

பீகார் முதல் அமைச்சரின் விளக்கம்!

பாட்னா, செப். 1— பீகார் மாநிலத்தில் 1950 முதல் இன்றுவரை வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம் சுமார் ரூ. 170 கோடி இருக்கும் என்று பீகார் சட்டசபையில் முதல் அமைச்சர் சின்ஹா தெரிவித்துள்ளார்.

இப்போது ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தினால் பீகாரில் மட்டும் ரூ. 50 கோடி நஷ்டமேற்பட்டிருக்கிறதாம்!

மத்திய சர்க்கார் அளிக்கும் உதவியுடன் சேர்ந்து பீகார் சர்க்கார் இந்த ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் நிவாரணத்திற்காக ரூ. 6½ கோடி செலவிடுவார்கள் என்று தெரிகிறது.

பீகாரில் இதுவரை 1950 - முதல் ரூ 19 கோடி வெள்ள நிவாரணத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது என்று சின்ஹா கூறினார்.

இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம், வெள்ளப் பெருக்கினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது; பீகார் மாநிலத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டப்படி ரூ 42 கோடி செலவிடப்படுவதாகும், இதில் ரூ 19 கோடி வரை வெள்ள நிவாரணத்திற்காக செலவிடப்படுகிறதென்றும் இத்தொகை, பீகாருக்கு ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டதிலிருந்தே செலவாகிறதென்றும் பீகார் முதல் அமைச்சர் மேலும் கூறினார்.

"ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைய முடியாது; நான் இதுவரையில் எனக்குத் தெரிந்த மட்டில் இப்போது நிலவுகிறதைக் கண்டேன்; "இந்த மாதிரியான வேதனைக்கு முடிவே கிடையாதா? இவ்விதம் இப்பொழுது வேண்டும் என்ற மக்களின் வேதனைக் குரல் கேட்கிறது," என்று சின்ஹா மேலும் கூறினார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தமாதம் அவர், திருவாங்கூர் சட்டசபையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

• • •

திரு—கொச்சி சர்க்கார் கட்சியின் போக்கு!

பி.—சோ. தலைமைக்குக் கோரிக்கை

பட்டம் தாணு பிள்ளை சென்ற சென்னைக் கூட்டத்தில் திருவாங்கூர்—கொச்சி அரசாங்கம் பற்றி எந்தவிதமான முடிவையும் எடுக்க வேண்டாமென்று பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்திடம் கூறினார். பட்டம் தாணு பிள்ளைக்கு திரு—கொச்சி சட்டசபை பிரஜா-சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டத்தின் உத்தரவிடப்பட்டிருந்தது என்று தெரிகிறது.

திரு—கொச்சியின் உள்ள தமிழர்கள் பிரச்சினைபற்றி ஆராய, பம்பாயின், பி—சோ. கட்சியின் நிர்வாகக் குழு, செப்டம்பர் 4, 5 தேதிகளில் கூட இருக்கிறது.

இக்கூட்டத்தை ஒட்டியே மாதம் அங்கு திருவனந்தபுரத்தில் கூட்டத்தைக் கூட்டுமாறும் தலைமை பீடத்திடம் அதிகாரம் பட்டம் தாணு பிள்ளைக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறதாம்!

தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

☆

3—9—54: நாகப்பட்டணம் : மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

4, 5—9—54: கோவை மாவட்டம்: உழவர் மாநாடு, பல்லடம்

9—9—54: விருத்தாசலம் : தோழர் இராம. அரங்கண்ணல் திருமண நிகழ்ச்சி

'குறள் நெறி'

3—9—54 மாலை 5 மணியளவில், திருச்சி, கருணாநிதிப் பூங்கா, சங்கரன் முன்னேற்றத் தனிப் பயிற்சிக்கூட மன்றத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'குறள் நெறி' என்பது பற்றி விரிவுரையாற்றுவார்.

மதுரைத் திருவள்ளுவர் கழகம் ஆண்டு விழா

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் 13-வது ஆண்டு நிறைவு விழா செப்டம்பர் 2 முதல் 6-ம் தேதி வரை மதுரை, மடத்தடி வீதியிலுள்ள கழக மன்றத்தில் நடைபெறும். திருவள்ளுவரின் பெருமை பற்றி பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

'எமலோகம்' நாடகத்திற்குத் தடை!

'எமலோகம்' என்ற நாடகம், சென்னை பெத்துநாயக்கன் பேட்டை, சின்னைய நாயுடு வீதியிலுள்ள மாரியம்மன் கோயில் முன்னிலையில் தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையிலும், கே. ராமலிங்கம் எம். சி. முன்னிலையிலும் நடத்த ஏற்பாடாகி இருந்தது.

உதவி கமிஷனர் நாடகத்திற்கு அனுமதி அளித்திருந்தும், அனுமதியைக் கொண்டு ஒலிபெருக்கி அனுமதி பெறுவதற்காகச் சென்ற தோழர்களிடம், கமிஷனர் கொடுத்த அனுமதிக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, 'டி' டிவிஷன் போலீஸ் அதிகாரிகள் நாடகத்தைத் தடைசெய்து விட்டதாக அனுமதி பெறச் சென்ற தோழர்களிடம் கடிதம் பெற்றுக்கொண்டு, நாடகம் தடை செய்யப்பட்டதாக அறிவிக்கும் பிரதி ஒன்றைக் கொடுத்தனர். நாடகம் காண வந்த திரளான மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

அனுதாபம்

புளியந்தோப்பு, 18-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர் தோழர் மோ. வெ. நிமலாம்பாள் மனை வேல்பாறை இறந்தமை கேட்டு, திமுகழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அடிமைகளாக வாழ்கிறீர்கள்!.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடிமையாகவே என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

நந்தலால் சர்மா என்பவர் பேசுகையில், இந்து தர்மம் அரிஜனங்களுக்கு இழைக்கப்படவில்லை என்றும், அவர்களைத் தாழ்த்தப்பட்டோராகக் கருதவில்லை என்றும், அரசியல் சாதிகள்தான் கோவிலையும், மதத்தையும் இழிவுபடுத்துகின்றன என்றும் கூறினார்.

இவரை இடைமறித்து, தோழர் பி. என். தாதர் பேசுகையில், நந்தலால் சர்மாவின் கூற்று தவறு என்று கூறி, இந்து தர்மம்தான் அரிஜனங்களை இழிவுபடுத்தத் தள்ளியது என்பதை எடுத்துக் காட்டி, தனது வாதத்திற்கு ஆதாரமாக மனுஸ்மிருதியிலிருந்து சில ஆதாரங்களை எடுத்துக் காட்டினார்.

சேலம் நகர தி. மு. கழக

நிதி நாடகங்கள்

★

சேலம் விக்டோரியாவில் 5-9-54 ஞாயிறன்று

மதுரை பி. எஸ். செல்வா & பி. எஸ். கலைத்தூதன் குழுவினரின் அதிஉன்னத சமூக சீர்திருத்த நாடகங்கள்

மாலை 6-30 மணிக்கு: 'தவறியவள்?'

இரவு 10 மணிக்கு: 'இரத்தக் கறை'

நல்ல வாய்ப்பு! காணத் தவறாதீர்கள்!!

கட்டணம்: 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0

—நகர தி. மு. சழகம், சேலம்.

தூத்துக்குடி சதி வழக்கு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறவில்லை; நான் முழு மனதுடன் ராஜாஜி கல்வித் திட்டத்தை வரவேற்கிறேன்; தி. மு. க.-வுக்கு, அந்தத் திட்டம் பிடிக்காது; கம்யூனிஸ்டுகள் அந்தத் திட்டத்தை எதிர்த்தார்களா என்று எனக்குத் தெரியாது; கீழ்க் கோர்ட்டில், கம்யூனிஸ்டுகளும் அந்த கல்வித் திட்டத்தை எதிர்த்தார்கள் என்று சொன்னேனா என்பது தெரியாது; சில பிரஜா-சோஷலிஸ்டு கட்சிக்காரர்களும், காங்கிரசில் சிலரும், இந்தக் கல்வித் திட்டத்தை எதிர்த்தார்கள் என்பது உண்மை; எல்லாக் கட்சிக்காரர்களும்தான் 15-ம் தேதி மறியல் செய்தார்கள் என்பதும் உண்மையல்ல; ரயில்வே ஸ்டேஷனுக்கு உள்ளே ஆட்கள் இல்லை; கீழ்க் கோர்ட்டிலும் இதைச் சொல்லியிருக்கிறேன்; தண்டவாளத்தில் உட்கார்ந்திருந்தார்களென யாரையும் குறிப்பாக என்னால் சொல்ல முடியாது; அதில், காங்கிரஸ்காரர்களும் இருந்தார்களாவென என்னால் சொல்ல முடியாது; தண்டவாளத்தில் யாரும் படுத்திருந்தார்களாவென நான் கவனிக்கவில்லை; எனக்கும் ஸ்டேஷனுக்கும் 50 கெஜ தூரம் இருக்கும்; ரயில் வண்டியின் டிரைவர் ஆங்கிலோ—இந்தியரா என்பது எனக்குத் தெரியாதென்று கீழ்க் கோர்ட்டில் கூறியிருக்கிறேன்; அதிகாரிகள் யாராவது மறியல் செய்தவர்களிடம் பேசினார்களா என்று எனக்குத் தெரியாது; கலெக்டர், 5-வது எதிரியுடன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது நான், 30, 40 அடி தூரத்தில் இருந்தேன்; 5-வது எதிரி, என்ன சட்டை போட்டிருந்தார் என்று எனக்குத் தெரியாது; மறியல்காரர்கள் சிலர் சட்டை போட்டிருந்தார்கள்—சிலர் துண்டு போட்டிருந்தார்கள்; எனக்கு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜாவை ஒரு வருடமாகத் தெரியும்; அவர் அன்று அங்கு இல்லை; கீழ்க் கோர்ட்டில், அவர், ரயில்வே பிளாட்பாரத்தில் இருந்தார் என்று கூறியிருக்கிறேன்; நான் கூறியிருப்பது பொய் என்பது சரியல்ல; 15-7-53-ல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜா அங்கு இருந்தார் என்பது எனக்குத் தெரியாது; கீழ்க் கோர்ட்டு வாக்குமூலத்தை நான் படித்துப் பார்க்கவில்லை; என்னுடைய கடையில் 7, 8 பேர் வேலைக்கு இருக்கிறார்கள்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர், என்னுடைய வேலைக்காரர்களை விசாரணை செய்யவில்லை; அவர் என்னை விசாரிக்கும்பொழுது, என் கடைக்கு வருபவர்களின் அடையாளங்களை நான் கூறவில்லை; சேதப்பட்ட பொருள்களை நான் மதிப்பிடவில்லை; அவரிடம் நான், உடைந்த கதவைக் காட்டினேன் என்பது ஞாபகமில்லை; முதல் இடத்த தகவலை மேற்கொண்டு 20 பேர் வந்து தாக்கியதாக அவரிடம் கூறியது ஞாபகமில்லை; என்னுடைய வீட்டுக் கதவு, தாக்கியதால் உடைந்தது என்றும் கூறியது ஞாபகமில்லை; அவரிடம், எசக்கியப் பிள்ளையை என்னுடன் கூட்டிக்கொண்டு போனதாகக் கூறியிருக்கிறேன்; அவர், என் தெருவில் வேறு யாரையும் விசாரணை செய்தாரா என்பது எனக்குத் தெரியாது; 27-வது எதிரியின் பெயர் மகாலிங்கம்; கீழ்க் கோர்ட்டில்தான் அவர் பெயர் எனக்குத் தெரியும்; கல்லெறிந்தவர்களின் அடையாளங்கள் பற்றி நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லை; 27-வது எதிரியை அடையாளம் காட்டும் பரீட்சையில் நான் காட்டவில்லை; 15-ம் தேதிக்கு முன்னாலேயே எனக்கு ரயில் மறியல் பற்றித் தெரியும்."

பிறகு எதிரிகள் சார்பாக வி. என். கந்தையா நாடார் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"காங்கிரசுக்குள்ளே, ராஜாஜி கல்வித் திட்டம் விஷயமாக பிளவு கிடையாது; சம்பவம் நடக்கும்பொழுது, என் கடைக்கும் பிள்ளைக்கும் எதிர்ப்புறமுள்ள மடக் கடை சாயபுக்கும் தெரியும்."

☆

20-வது சாட்சியாக லட்சுமண பிள்ளை, சர்க்கார் தரப்பு சார்பில் விசாரிக்கப்பட்டார்; அவருடைய விசாரணையின்போது சர்க்காருக்கு எதிராக சாட்சி மாறிவிட்டதாகவும், அதைப் பதிவு செய்து கொள்ளும்படியும் சர்க்கார் வக்கீல் கூறினார்.

பிறகு எதிரிகள் சார்பாக எம் செல்லையப்ப பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்த பொழுது, சாட்சி கூறியதாவது:-

"அதிகாரிகள் முன்பு நான் அடையாளம் காட்டவில்லை; 10 நாட்களுக்குப் பிறகு, சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; எனக்கு சொத்து வீடு, சொந்த கிடையாது; எனக்கு, சர்க்காரின் 19-வது சாட்சி தெரியும்; என் வீட்டு பக்கம் தான் இருக்கிறார்."

☆

21-வது சாட்சியாக, சோதண்டராம ஐயர், சர்க்கார் தரப்பில் விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக எம் செல்லையப்ப பிள்ளை சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:-

"தி. மு. க. உறுப்பினர்களுக்கு நான் வழக்குக்கு ஆஜராகி இருக்கிறேன்; அந்தக் கூட்ட தி. மு. க. தலைவர் யாரென்று எனக்குத் தெரியாது; யார் கமிட்டி மெம்பர்கள் என்றும் தெரியாது; 5-வது எதிரி, முனிசிபல் கவுன்சிலர் என்று தெரியும்; நான் தி. மு. க. கூட்டங்களுக்குப் போவது கிடையாது."

[illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை [illegible]